<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **434/2019** நாள்: **20.08.2025** வா.சா.**1** – மனோஜ்குமார்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>

2ம் பிரதிவாதிக்கு தமிழ்நாடு பவர்கிரிட் கார்பரேசனிலிருந்து தொகை வழங்க கூடாது என்று நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.**132/2020** வழக்கின் வழக்குரை நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.**4** ஆகும். 20.08.2004 ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களில் நான் பட்டுப்பூச்சி பண்ணை வைத்துள்ளேன் என்றால் சரிதான். பட்டுப்பூச்சி வளர்ப்பதற்காக நான் RBL வங்கியில் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் தென்னத்தோப்பை பராமரிப்பதற்காக கடன் வாங்கியுள்ளேன். 20.08.2004 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தை நான் வங்கியில் வைப்பீடு செய்து தான் மேற்படி கடனை வாங்கினேன் என்றால் சாட்சி நான் வாங்கவில்லை, எனது தந்தை வாங்கியதாக கூறுகிறார். எனது பாட்டனாருக்கும், எனது தந்தைக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்ட சொத்தை எனது தந்தை, எனது பாட்டனாருக்கு பணம் கொடுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ரூ.2,20,000/– கொடுத்து எனது தந்தை மேற்படி விடுதலை பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளார். மேற்படி விடுதலை பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை எழுதி வாங்கிய விடுதலை பத்திரத்தை பொறுத்து எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். 20.08.2004 தேதியிட்ட பாக பத்திரம் உண்மையானது என்பதால் தான் பாகத்தின் மூலம் எனது தந்தைக்கும், பாட்டனாருக்கும் கிடைத்த பாகத்தை பொறுத்து எனது தந்தை விடுதலை பத்திரம் எழுதி வாங்கியதை ஆட்சேபனை செய்யவில்லை

என்றால் சரியல்ல. சர்வே எண்.426 ல் நானோ, எனது தாயாரோ ஒரு போதும், சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 26.12.1974 ல் 1ம் பிரதிவாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டுள்ளதால் கூட்டுக்குடும்ப சொத்து என்ற தன்மையை தாவா சொத்து இழந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாகபிரிவினை ஏற்பட்ட பிறகு 1ம் பிரதிவாதியும், அவரது மகன்களும் 20.08.2004–ல் பாகபிரிவினை செய்து கொண்டதால், பாகத்தில் கிடைத்த சொத்துக்கள் தரப்பினர்களுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகம் வேண்டும் என்றால் 20.08.2004 ல் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் தான் பாகம் கோர முடியும், மற்ற சொத்துக்களில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை அலைக்கழித்து தவறான ஆதாயம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்தில் எனக்கு எவ்வித பங்கு பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி உயில் மூலம் எழுதி வைத்துள்ள சொத்துக்களில் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் எழுதி வைத்துள்ள சொத்துக்களில் எனக்கு உரிமையில்லாத காரணத்தினால் தான் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் மேற்படி உயில் ஆவணம் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் உரிமையில்லாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.